### பேரிடர் நிவாரண நிதியாக ரூ.10 கோடி வழங்கிய

# தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## இமாச்சலப் பிரதேச முதல்வர் சுக்விந்தர் சிங் சமூக வலைதளத்தில் பதிவு



சிம்லா, ஆக. 25 -

இமாச்சலப் பிரதேச பேரிடர் நிவாரண நிதி 2023க்கு ரூபாய் 10 கோடி நிதி வழங்கியமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து இமாச்சலப் பிரதேச முதலமைச்சர் சுக்விந்தர் சிங் சுகு அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு :-

இமாச்சலப் பிரதேச பேரிடர் நிவாரண நிதி 2023க்கு ரூ.10 கோடி நிதியை பெருந்தன்மை யாக வழங்கிய தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்க ளுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக ளைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

உங்கள் ஆதரவு பேரிடர் காலங்களில் ஒற்றுமை மற்றும் பரிவுணர்வை பிரதிபலிக்கிறது. தொடர்ந்து ஒன்றிணைந்து கன மழையால் பாதிக்கப்பட்டவர்க ளுக்கு தேவையான நிவாரணங் களை வழங்குவோம்.

இவ்வாறு இமாச்சலப் பிரதேச முதல்வர் சுக்விந்தர் சிங் சுகு தெரிவித்தார்



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பேரூராட்சிக்குட்பட்ட திம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.25 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அதிநவீன வகுப்பறையை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (24.08.2023) திறந்து வைத்து, பார்வையிட்டார். உடன் குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார், கோத்தகிரி பேரூராட்சி தலைவர் திருமதி.ஜெயக்குமாரி உட்பட பலர் உள்ளனர்.

### நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு

# இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க ரூ.5 கோடி ஒதுக்கீடு!

## அமைச்சர் கா.இராமச்சந்திரன் அறிவிப்பு!

நீலகிரி, ஆக.25-

நீலகிரியில் இயற்கை விவசாயம் மற்றும் சிறுதா னிய வகைகளை ஊக்கு விக்க தமிழ்நாடு அரசு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி யுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் 25 லட்ச ரூபாய் மதிப்பீட் டில் அதி நவீன ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள் ளியை திறந்து வைத்து பேசு கையில் குறிப்பிட்டார்.

நீலகிரி மாவட்டம் குன் னூர் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட கோத்தகிரி பேரூ ராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுகளை குன் னூர் சட்டமன்ற உறுப்பின ரும், தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அரசு உயர் அதிகாரிகளுடன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து கோத்தகிரி ஊராட்சி திம் பட்டி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு 25 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அதிநவீன முறையில் கட்டப்பட்ட பள்ளி கட்டிடத்தை அமைச் சர் கா. ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்.

இதன் பின் நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் : நீலகிரி மாவட்டத்தில் இயற்கை விவசாயம் மேற்கொள்ள வும் சிறுதானிய வகைகளை நீலகிரியில் விளைவிக்க தமிழ்நாடு அரசு நடவ டிக்கை மேற்கொண்டு சுமார் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இயற்கை விவசா யத்தை ஊக்குவித்து வருவ தால் விவசாயிகள் இதன் மூலம் பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேரூ ராட்சி உதவி இயக்குனர் இப்ராஹிம் ஷா, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நெல்லை கண்ணன், கோத் தகிரி பேரூராட்சி தலைவி ஜெயக்குமாரி உட்பட அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தொடர்ந்து சுற்றுலா த்துறை அமைச்சர் கா.ராமச் சந்திரன் நீலகிரி மாவட் டம், குன்னூர் சட்டமன்ற தொகுதி, கோத்தகிரி பேரூ ராட்சியில் ரூபாய் 44 கோடியே 2 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை நேரில் ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேரூ ராட்சி உதவி இயக்குனர் இப்ராஹிம் ஷா, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நெல்லை கண்ணன், கோத் தகிரி பேரூராட்சி தலைவி ஜெயக்குமாரி, துணை தலைவர் போ.உமாநாத் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கே.ம்.ராஜு, expoசெந்தில், பொதுக்குழு உறுப்பினர் கள் வீரபத்திரன், கா.செல் வம் மற்றும் பல கழக நிர்வா கிகள் கலந்து கொண்டனர்.

### 69-வது தேசிய திரைப்பட விழாவில் விருதுபெற்ற

# ‘கடைசி விவசாயி’ படக்குழுவினருக்கு பாராட்டுகள்!

## விருது பெற்ற மேலும் பலருக்கும் வாழ்த்து தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஆக.25 -

65-வது தேசிய திரைப்பட விழா வில் விருது பெற்றவர்களுக்கு முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**69ஆவது தேசிய திரைப்பட விருதுகளில் தமிழில் சிறந்த படமா கத் தேர்வாகியிருக்கும் கடைசி விவசாயி படக்குழுவினருக்கு என் பாராட்டுகள்.**

**மேலும், இரவின் நிழல் படத்தில் ‘மாயவா சாயவா’ பாடலுக்காகச் சிறந்த பின்னணிப் பாடகி விருதை வென்றுள்ள ஸ்ரேயா கோசல், கரு வறை ஆவணப்படத்துக்காகச் சிறப் புச் சான்றிதழ் வென்றுள்ள இசைய மைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா, சிறந்த கல்வித் திரைப்படத்துக்கான பிரிவில் விருதுக்குத் தேர்வாகி யுள்ள சிற்பிகளின் சிற்பங்கள் படக் குழுவினர் ஆகிய அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித் துக் கொள்கிறேன்.**

**அதிர்ச்சி**

மறுபுறம், சர்ச்சைக்குரிய திரைப் படம் என நடுநிலையான திரை விமர்சகர்களால் புறக்கணிக்கப்பட்ட திரைப்படத்துக்குத் தேசிய ஒரு மைப்பாட்டுக்கான நர்கீஸ் தத் விருது அறிவிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

இலக்கியங்கள், திரைப்படங்க ளுக்கு அளிக்கும் விருதுகளில் அர சியல் சார்புத்தன்மை இல்லாமல் இருப்பதுதான் அந்த விருதுகளைக் காலங்கடந்தும் பெருமைக்குரிய வையாக உயர்த்திப் பிடிக்கும். மலி வான அரசியலுக்காகத் தேசிய விருதுகளின் மாண்பு சீர்குலைக் கப்படக் கூடாது.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

### டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமை!

# திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா - பட்டிமன்றம்!

## அமைச்சர் ஆர்.காந்தி வாழ்த்து! நாஞ்சில் சம்பத் சிறப்புரை!

திருவள்ளூர், ஆக.25-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பட் டிமன்றம் இன்று (25.8.2023- வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு கும்முடிப்பூண்டி கடை வீதியில் நடைபெறு கின்றது.

விழாவிற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

மு.மணிபாலன், கி.வே. ஆனந்தகுமார், ந.பரிமளம் ஆகியோர் முன்னிலை வகிக் கின்றனர்.

மு.பகலவன், ஜெ. மூர்த்தி, மு.கதிரவன், கோ. வி.ஜி. உமா மகேஸ்வரி,எம். எல்.ரவி, எஸ்.ரமேஷ், பி. வெங்கடாசலபதி, பா.செ. குணசேகர், ஏ.வி.ராம மூர்த்தி, கே.சுப்பிரமணி, திருமதி டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞ ரைக் காலமெல்லாம் தமிழ் நாடு போற்றிப் புகழ்ந்திடப் பெரிதும் காரணம் - மக் களை ஈர்த்த திட்டங்களா? மக்களை காத்த சட்டங் களா என்ற தலைப்பில் பட் டிமன்றம் நடைபெறு கின்றது.

பட்டிமன்றத்திற்கு நடுவ ராக நாஞ்சில் சம்பத் திகழ்ந் திட, மக்களை ஈர்த்த திட் டங்களே என்ற தலைப்பில் குமரி பிரபாகரன், முனை வர் வேதநாயகியும், மக் களை காத்த சட்டங்களே என்ற தலைப்பில் பேராசிரி யர் அன்பு, பேராசிரியை மலர்விழி ஆகியோரும் வாதிடுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச் சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

இதில் கும்முடிப்பூண்டி கி.வேணு, முன்னாள் அமைச்சர் க.சுந்தரம், இ.ஏ. பி.சிவாஜி, ஆ.கிருஷ்ண சாமி, சி.எச்.சேகர், கே.ஜி. பாஸ்கர் சுந்தரம்,வெ.அன்பு வாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.பி.உதயசூரியன், டி.கே.சந்திரசேகர், எம்.எச். கே.ரமேஷ்ராஜ், ஆ.சத்திய வேல், பா.சுகுமாறன், நா. செல்வசேகரன், கா.சு. ஜெக தீசன், பொன்னுசாமி என் கிற ஜான், ஜி.ரவிக்குமார், அபிராமி குமரவேல், பி. முத்து, க.க.தமிழ்உதயன் மற்றும் பலர் பங்கேற்கின் றனர். இரா.அறிவழகன் நன்றி கூறுகிறார்.

### கர்நாடக அணைகளில் திறக்கப்படும் தண்ணீரின் அளவு அதிகரிப்பு!

ஒகேனக்கல், ஆக.25–

கர்நாடக மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கே.ஆர்.எஸ், கபினி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதன் காரணமாக காவிரி ஆற்றில் திறக்கப்படும் உபரி நீரின் அளவு 11 ஆயிரத்து 720 கன அடியாக அதிகரித்து உள்ளது.

கிருஷ்ணராஜ சாகர், கபினி அணைகளில் இருந்து நேற்று முன்தினம் 11 ஆயிரத்து 574 கன அடி நீர் திறந்துவிடப்பட்ட நிலையில், நேற்று அதிகரிக்கப்பட்டு உள்ளது. கே.ஆர்.எஸ். அணையில் இருந்து காவிரி ஆற்றில் திறக்கப்படும் நீரின் அளவு 10,720 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கபினி அணையில் இருந்து காவிரி ஆற்றில் திறக்கப்படும் உபரி நீரின் அளவு 1000 கன அடியாக உள்ளது.



குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் இமயம் தொட்ட முதல் தமிழ் பெண் முத்தமிழ்செல்வி நாராயணனுக்கு பாராட்டு விழா! பரிசு தொகையாக 5.0 லட்சத்தை குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் வழங்கினார்

### குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில்

# இமயம் தொட்ட முதல் தமிழ் பெண் முத்தமிழ்செல்வி நாராயணனுக்கு பாராட்டு விழா!

## பரிசுத் தொகையாக 5 லட்சத்தை படப்பை ஆ.மனோகரன் வழங்கினார்

காஞ்சிபுரம், ஆக. 25 -

குன்றத்தூர் தெற்கு ஒன் றிய திமுக சார்பில் இமய மலை சிகரத்தை அடைந்த முதல் தமிழ் பெண் திராவிட முதல்வர் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருகரங்க ளால் கல் பனா சாவ்லா விருது பெற்ற முத்தமிழ்செல்வி நாராய ணன் அவர்களுக்கு பாராட்டு விழா மற்றும் நினைவு பரிசு வழங்கும் நிகழ்ச்சி படப்பை சி.என்.சி திருமண மண்டபத் தில் 24.08.2023 வியாழக்கிழமை, குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலா ளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

இமயமலை சிகரம் அடைந்த முதல் தமிழ் பெண் முத்தமிழ்செல்வி நாராய ணன் அவர்களை பாராட்டி பொன்னாடை அணிவித்து கேடயம் வழங்கி, அடுத்து அவர் தென் ஆப்பிரிக்கா நாட்டில் உள்ள கிளி மஞ் சாரோ மலை ஏறுவதற்காக ஊக்க தொகையாக ரூபாய் 5.0 லட்சத்தை குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலா ளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் குன்றத்தூர் ஒன்றிய பெருந்த லைவர் சரஸ்வதிமனோக ரன், குன்றத்தூர் தெற்கு கழக ஒன்றிய நிர்வாகிகள் வ.நந்த கோபால், ஏ.மணி, வாசுகிம கேஷ், சி.பார்த்தசாரதி, மு.ராஜே ந்திரன், மா.பரிமே ளழகன் உள்ளிட்ட கழக நிர் வாகிகள் முன்னிலை வகித்த னர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அணிகளின் நிர்வா கிகள் சங்கீதாவேலு, எஸ்.கர் ணன், பொன்.ரமேஷ்கவி,

க.தினேஷ், ச.பாலகிரு ஷ் ணன், கு.ஏழுமலை, கா.ஏழு மலை, ஒன்றிய இளைஞர் நிர்வாகிகள் ப.அறிவொளி, க.பா.ஆடலரசு, மா.சே.பிர காஷ் ஒன்றிய மாணவர் அணி நிர்வாகிகள் அ.ஜமீர், இரா.குமரவேல், சையது ரமிஸ், செ.பார்த்திபன் ஒன் றிய மகளிர் அணி நிர்வாகிகள் மல்லிகா நடராஜன், ஷோபா ரகுநாதன், ஒன்றிய விவசாய அணி நிர்வாகிகள் ஏ.இ.பஞ் சா ட்சரம் அசோக்குமார் மற் றும் ஊராட்சி மன்ற தலை வர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் உள் ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### தமிழகம், புதுவையில் அடுத்த 7 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஆக. 25 -

தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளின் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் முன் னதாக தெரிவித்து இருந்தது. இதனி டையே, சென்னையின் பல்வேறு பகுதி களில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பலத்த மழை பெய்தது.

இந்த நிலையில், தமிழகம், புதுவையில் அடுத்த 7 நாட்க ளுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தகவல் தெரிவித்துள்ளது. அத்துடன், விழுப்புரம், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 3 மாவட்டங்களில் இன்று கன மழை பெய்ய வாய்ப்பிருப்ப தாகவும் வானிலை மையம் கூறியுள்ளது.

சென்னையை பொறுத்த வரையில், வானம் மேகமூ ட்டத் துடன் காணப்படும் என்றும், நகரின் ஓரிரு இடங்களில் மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அதிகபட்ச மாக மேற்கு தாம்பரத்தில் 11.4 செ.மீ. மழையும், காட்டுக்குப்பம், உத் தண்டியில் தலா 10 செ.மீ. மழை யும் பதிவாகியுள்ளது. அத்துடன், திருவொற்றியூர், சோழிங்க நல்லூர், முகலிவாக்கம் ஆகிய பகுதிகளில் தலா 8 செ.மீ. மழை யும், கொரட்டூர், மணலி, கோடம் பாக்கத்தில் தலா 7 செ.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.சி.இளங்கோவன் (எ) ஏழுமலை

### ஆகஸ்ட் 25 (2016)



ஒருங்கிணைந்த செங்கை–அண்ணா மாவட்டத்தில் உள்ள வில்லிவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – பொதுக்குழு உறுப்பினராக இரண்டு முறையும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

இவர், அரசுப் பள்ளியில் தலைமையாசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது, துறையின் பல்வேறு நடவடிக்கைகளையும் மீறி கழகம் அறிவித்த ஆர்ப்பாட்டம், போராட்டங்களில் பங்கு கொண்டார்.

இவர் ஒன்றியச் செயலாளராக இருந்தபோது, சைக்கிளிலேயே பயணம் செய்து கழகத்தை வளர்த்ததுடன், இந்தித் திணிப்பு, சட்டநகல் எரிப்பு போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### துறைமுகம் கிழக்கு - 60வது வட்ட அவைத் தலைவர் அ.மகேந்திரனின் துணைவியார் - (மறைந்த)

# திருமதி ம.அறிவுச்செல்வி திருவுருவப் படம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைக்கிறார்!

சென்னை, ஆக. 25-

துறைமுகம் கிழக்குப் பகுதி - 60வது வட்டக் கழக அவைத் தலைவர் அ. மகேந்திரனின் துணைவி யாரும், பகுதி மாணவரணி துணை அமைப்பாளர் ம.சிலம்பரசனின் தாயாரு மான ம.அறிவுச் செல்வி (வயது 62) இயற்கை எய்தி னார்.

அன்னாரின் திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி நாளை (26.8.2023 - சனிக்கி ழமை) மாலை 7.00 மணிய ளவில், துறைமுகம் - கார்ப் பரேஷன் காலனி - எண் 29 பிளாக் எனும் முகவரியில் உள்ள அன்னாரின் இல்லத் தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு துறைமு கம் கிழக்குப் பகுதிச் செய லாளர் எஸ்.இராஜசேகர் தலைமை வகிக்கிறார்.

60வது வட்டச் செயலா ளர் கே.கவியரசு முன் னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் - சென்னை கிழக்கு மாவட் டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு, அன்னாரின் திரு வுருவப் படத்தைத் திறந்து வைக்கிறார்.

எஸ்.முரளி, எம்.விஜய குமார், ஜி.எம்.தேவன், ப.ஸ்ரீராமுலு, இசட்ஆசாத், என்.பி.எம்.சேக் அப் துல்லா, எம்.இப்ராஹிம் கனி, ஆர்.கலைச்செல்வி, வானவில் விஜய், பி.விஜய குமார், பா.பிரதீப் குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந் தானலட்சுமி, சி.ப.ஜெய ராமன், மே.ஜனார்த்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத் துக்குமார், எல்.சத்தியநாரா யணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், த.கதிர வன், எம்.பரத் குமார், ஆ.ந.பார்த்திபன், மா.ஜெய் சங்கர், பா.கதிரவன், ஆர். ரவிச்சந்திரன், ஜி.ராம மூர்த்தி,பா.அண்ணாதுரை, சேப்பாக்கம், வே.பா.பிர பாகரன், டி.சதீஷ்குமார், வெ.பரிமளம், ட.நவீன், கே.சரஸ்வதி, ராஜேஷ்ஜெ யின், எம்.ரஃபி, எம்.பி.ஏழு மலை, இ.ராஜேஸ்வரி, ஜி.எம்.மணிகண்டன், இரா.விஜய், கே.ஏ.துரை, எஸ்.குணசேகரன், டி. டில்லி குமார், கே.எட் வர்ட் கென்னடி, டி. விமலா, ஜெ.மணி வண்ண ன், ம.கனிவரசன் உள் ளிட்டோர் இந்நிகழ்ச்சி யில் கலந்துகொள்கின்றனர்




முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு மாநில பொறியாளர் அணி சார்பாக பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பேச்சு போட்டி, கட்டுரை போட்டிகளை நடத்துவதற்கு மண்டலம் வாரியாக ஆலோசனைக் கூட்டம் நடந்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக சேலம் மண்டலத்தில் ஆலோசனைக் கூட்டம் நேற்று மாநில பொறி யாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில பொறியாளர் அணி தலை வர் துரை.கி. சரவணன், மாநில துணை செயலாளர்கள் உமாகாந்த், பிரதீப், நரேந்திரன் மற்றும் மண்டல மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.